# யாழ்ப்பாணத் தமிழரசு

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1505ஆம் ஆண்டு) போர்த்துக்கேயர் இலங்கைத்தீவில் காலடி வைப்பதற்கு முன்னரே யாழ்ப்பாணத் தமிழரசு வலுவானதாகத் திகழ்ந்தது. கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே சிறப்புடன் விளங்கியது. வெளிநாட்டுப் பயணியான இபன் பற்றுற்றாவின் குறிப்புகளில் இருந்து விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தது யாழ்ப்பாண அரசே என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. திறையாகப் பெற்ற யானைகள் பலவற்றை யாழ்ப்பாணத் தமிழரசர் தமிழக அரசுகளுக்கு அன்பளிப்பாக வழங்கினர். மேலும் மன்னார்க் கடலில் முத்துக்குளிக்கும் முழு உரிமையைப் பெற்றிருந்தமையால் முத்து வணிகத்தில் பெருஞ் செல்வத்தை ஈட்டினர்.

யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் கதிரமலையிலும், சிங்கைநகரிலும் தமிழரசு நிலவியது பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் 1450ஆம் ஆண்டுக்கு முன்னர் வலுவான அரசாகவும் ஏனைய பகுதிகளில் செல்வாக்குக் கொண்டிருந்த அரசாகவும் யாழ்ப்பாண அரசு திகழ்ந்ததுபற்றி தமது நூல்களில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

1215ஆம் ஆண்டிற்குப் பின் மாகன் ஏற்படுத்திய அரசியல் மாற்றத்தினால் எழுந்த யாழ்ப்பாண அரசு கி.பி 16ஆம் நூற்றாண்டு வரை வலுவுடன் நின்று நிலைத்தது. யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னனாக இருந்தவன் இரண்டாம் சங்கிலியன் எனும் சங்கிலிகுமாரன். இவனுக்கு உள்நாட்டில் எதிர்ப்பு இருந்தமையால் போர்த்துக்கேயர் 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இதன் பின் 1621ஆம் ஆண்டு கோவாவில் சங்கிலியன் தூக்கிலிடப்பட்டதனைத் தொடர்ந்து நான்கு நூற்றாண்டுகளாக நிலைத்த யாழ்ப்பாணத் தமிழரசு முடிவடைந்தது.